Regd. No. M. 4900. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம்
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம்
★
நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 } ஈரோடு 24-4-1948 சனிக்கிழமை { மலர் 33.

ஜாதி மதமற்ற சமுதாயம் நிறுவ!

பெரியார் ஆலோசனை.

இந்திய யூனியனில் ஜாதி மதச் சார்பு அற்ற ஆட்சியை நிறுவுவதற்குப் பெரியார் அவர்கள் கீழ்க்கண்ட ஆலோசனையை அரசியல் நிர்ணய சபைக்கும் காங்கரசுக்கும் வெளியிட்டுள்ளார்.

இந்திய தேசியக் காங்கரசின் கொள்கைகளை விளக்குவதில் கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனிக்க வேண்டுகிறோம்:—

இந்தியாவில் உள்ள இந்துக்கள் என்பவர்களில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்பதாக மூன்று பிரிவுகள் சட்டத்திலும் அநுஷ்டானத்திலும் பல ஆதாரங்களிலும் இருந்து வருகிறது. இந்தப் பிரிவின்படி பண்டித நேரு பிராமணராகவும், காந்திஜி சூத்திரராகவும், டாக்டர் அம்பேத்கார் ஹரிஜன் ஆகவும், கருதப்படுகிறார்கள்.

இந்திய அரசாங்கம் ஜாதி பிரிவு, ஜாதி சலுகை, ஜாதி தொகுதி, ஜாதிப் பிரதிநிதித்துவம் இல்லாத அரசாங்கமாக இருக்கும் என்று அடிக்கடி பிராமண வகுப்பில் வருகிற தலைவர்களாலும் காங்கரஸ் பிரமுகர் பிரசாரகர்களாலும் சொல்லப்பட்டு வருகிறது.

இப்போதுள்ள பிரிட்டிஷ் ஆதிக்கம் நீங்கின இந்திய யூனியன் அமைப்பு முறையிலும் ஜாதி வகுப்பு விஷயமாய் செய்யப்படப்போகும் விதிகளில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற வார்த்தைகளுக்கு இடம் அளிக்கப்படுமா? சட்டங்கள், இந்துமத சமுதாய ஆதாரங்கள், இடங்கள் முதலியவைகளில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற வார்த்தைகள் இருக்க இடம் அளிக்கப்படுமா? அந்தப்படி இருப்பவைகளை சர்க்கார் அங்கீகரிக்குமா? என்கின்ற விஷயம் இதுவரையில் தெளிவாக்கப்படவில்லை.

இந்த விஷயங்கள் தெளிவாக்கப்படாமல் ஜாதிகளின் பேரால் தொகுதியில்லை, பிரதிநிதித்துவமில்லை, சலுகையில்லை என்று சொல்லப்படுவது பிரிவினையின் காரணமாகக் கீழ் நிலையில் இருக்கும் மக்களுக்குப் பெருத்த அநீதியாகவும் குறைபாடாகவும் அசௌகரியமாகவும் முன்னேற்றத் தடையாகவும் இனியும் இருக்க இடமாகிறது.

ஆகவே இந்திய யூனியன் கான்ஸ்டிடியூஷனிலும் இந்திய தேசியக் காங்கரஸ் கான்ஸ்டிடியூஷனிலும் "இந்திய யூனியனில் உள்ள மக்களில் அல்லது இந்துக்கள் என்கின்ற சமுதாயத்தில் அரசியலின் பேராலும் மத இயலின் பேராலும் சமுதாய இயலின் பேராலும் பிராமணர், சூத்திரர், ஹரிஜனர் என்கின்ற பிரிவு எந்த முறையிலும் அனுஷ்டிக்கப்படமாட்டாது.

இந்த வார்த்தைகள் அரசியல், மத இயல், சமுதாய இயல் கொண்ட எந்த ஆதாரங்களிலும் உபயோகிக்கப்படமாட்டாது என்பதோடு இவைகள் இருக்கவும் இடம் கொடுக்கப்படமாட்டாது. அப்படிப்பட்ட வார்த்தைகள் இருக்கும்படியான ஆதாரங்களை சர்க்கார், காங்கரஸ் மரியாதை செய்யாது ஆதரிக்காது. கல்வி, கலைத் துறையிலும் இவ்வார்த்தைகளுக்குப் பிரிவுகளுக்கு இடம் இருக்க அநுமதிக்கப்படமாட்டாது":—என்பவை தெளிவாக விளங்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டு விட்டால் இந்த யூனியனில் வகுப்புவாதங்களோ, வகுப்பு ஸ்தாபனங்களோ, வகுப்புக் கலவரங்களோ என்பவை இருக்க இடமில்லாமல் போய்விடும். வகுப்புக் குறைகளைச் சொல்லி சலுகைகளோ பிரதிநிதித்துவங்களோ உரிமைகளோ கொண்டாடவும் கேட்கவும் இடமில்லாமல் போய்விடும். இந்திய யூனியனும் பிறவியின் பேரால் பிரிவு, ஜாதிப் பிரிவு வகுப்பு அற்ற ஒரே சமுதாயம் ஆக விளங்க முடியும்.

அந்தப்படிக்கில்லாமல் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற பிரிவுகளை ஜாதிகளை வைத்துக்கொண்டு இதன் காரணத்தால் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் குறை நீங்கத் தக்கதாக சலுகைகள் பிரதிநிதித்வங்கள் இல்லையென்று தடுப்பது கொடுமையான அநீதியாகும்.

ஆகவே இதை அரசியல் நிர்ணய சபையும், காங்கரஸ் விதிமுறை அமைப்பு சபையும் கவனிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

பெண்கள் பகுதி:

போரிடப் புறப்படுவோம்!

''தோழியர் டி. மங்கையர்க்கரசி''

★

எத்தனையோ பேப்பர்களில் பெண்கள் பகுதி இடம் பெற்றிருக்கிறது. அப்பகுதிகளிலெல்லாம், பெண்கள், துவைத்த புடவையைச் சுருக்கமில்லாமல் காயவைத்தால் தான் மறுநாள் உடுத்திக் கொள்ளச் சுருங்காமல் அழகாக இருக்கும் என்றும், மற்றும் அடுத்தாத்து அம்மாமி அப்பளம் இடும் ரகத்தைப்பற்றியும், எதிர்வீட்டு எச்சுப்பாட்டியின், ஆசார அனுஷ்டானங்களைப் பற்றியும் (பெரும்பாலும் ஆரியப்பத்திரிகைகளில் தான்) தான் விவரித்து இருக்கிறதே தவிர, பெண்களுக்கு அறிவுரை வழங்கும் பகுதியாக—அதிலும் திராவிடப் பெண்களுக்கு விழிப்பு ஏற்படும் வகையில், ஆரியப் பத்திரிகைகள் போகட்டும், திராவிடப் பத்திரிகைகளில்கூட இதுவரை வெளிவந்தது இல்லை. இக்குறையை நிவர்த்தித்து, பெண்களுக்கு விழிப்பேற்படும்படி செய்துவரும் நமது குடி அரசிற்கு, ஒவ்வொரு தோழியர்களும் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

''குடி அரசு'' செய்துவரும் தொண்டினால் பல மூடப்பழக்க வழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, நமது பெண்கள் முன்வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுதும் இருக்கிறது. அர்த்த மற்ற மூடநம்பிக்கைகளுக்குப் பெரும்பாலும், நமது திராவிடப் பெண்களே இலக்காகிறார்கள். உதாரணமாக, மகமாயிக்குப் பிச்சை எடுத்துக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவதாக வேண்டிக்கொண்டேன் என்று ''மகமாயி தாலாட்டு'' என்ற ஒப்பாரியை வெட்கமில்லாமல், தெருத்தெருவாய் பாடிக்கொண்டு பிச்சை எடுப்பதும் நமது திராவிடப் பெண்கள்தான்! பேய் பிசாசு நம்பிக்கையினால், பொருளைப்பூசாரிக்கும் மந்திரக்காரனுக்குமாகக்கொட்டி அழுவது மன்னியில்—பேய் ஓட்டிக் கொள்கிறேனென்று, பூசாரியிடம் அடிபடுவதும் (வேப்பிலையினால் தான்) நமது திராவிடத் தோழியர்தான்!

எனக்குத் தெரிந்த தோழி ஒருத்தி, ஹிஸ்டீரியா நோயினால் பீடிக்கப்பட்டிருந்தாள். அவள் சிலசமயம் அழுவாள். சிலசமயம் சிரிப்பாள். இதே மாதிரி இயற்கைக்கு முரணாக ஏதாவது செய்து கொண்டே இருப்பாள். அவளை மருத்துவ விடுதியில் சேர்க்கும்படி கூடியவரை சொல்லிப் பார்த்தேன். அவள் தாயார் கேட்கவே இல்லை. அவளுக்குப்பேய் பிடித்திருக்கிறது; ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் என்ன செய்வது? பக்கத்து ஊரில் உள்ள மந்திரவாதியை அழைத்துக் கெடம் வைத்துப் பூசை செய்துதான் பேயை ஓட்டவேண்டும் என்று மருத்துவ விடுதியில் சேர்க்க மறுத்துவிட்டாள். கடைசியாக மந்திரக்காரனுக்கும், பூசாரிக்குமாக பொருளைக் கொடுத்தும் பலன் ஏற்படவில்லை. அப்படியும், அவள் தாயார் பேய்பிடித்ததென்ற மூடநம்பிக்கையைத் தளரவிடாமல், சோசியர் சங்கர அய்யரிடம் அந்தப்பெண்ணினுடைய சாதகத்தைக் காட்டி நல்ல காலம் எப்போது என்று கேட்டுவரத் தட்சணையுடன் புறப்பட்டாள் அவர் இல்லத்திற்கு.

சோசியரோ, தனக்கு வரும்படி கிடைத்தது மன்னியில், கோவில் குருக்களுக்கும் வரும்படி தேடித்தர நினைத்து, பெண்ணுக்குக் கிரகதோஷம், அதுவிலக சனீஸ்வர பகவானுக்கு ஒரு மண்டலம் எள்ளுப் பொட்டணம் கட்டி விளக்கேற்றி பகவான் உடல் குளிர அபிசேகம் செய்து, உள்ளம் குளிர அர்ச்சனையும் செய்து வந்தால் சீக்கிரத்தில் பலன் ஏற்படும் என்று சொன்னார். பிறகு கேட்க வேண்டுமா? குருக்களுக்குத்தெட்சனையும், கல்லுக்கு எண்ணையும் பாலுமாகக்கொட்டி கொட்டி அழுதாள். இவளும் ஒரு திராவிட மூதாட்டிதான்.

மாதந்தவறாமல் மகமாயிக்கு மாவிளக்குப் போட்டுக் கொண்டுதான் வருகிறேன். என்னைப்போல் , யாரும் இவ்வளவு கரைகண்டாக காணிக்கை செலுத்த மாட்டார்கள். அப்படியிருந்தும் எனது குழந்தை மூன்றுக்கும் உடல் நிறையும்படி அம்மா (வைசூரி) நிரபாரமாய்க்குடி கொண்டிருக்கிறாள். இதுவும் அவள் சோதனை போலும், என்று அலுத்துக் கொள்வதும் திராவிடப்பெண்மணிகள் தான்!

அய்வருக்கும் தேவியான பாஞ்சாலிக்கு (திரௌபதி) கோவில் கட்டி வழிபடுவதும் நமது திராவிடப் பெண்கள்தான்!

இவ்வளவு பெண்களிலும் எந்த ஒரு பெண்ணுக்காவது சிறிது அறிவு இருந்தால், ஏ! மானங்கெட்ட மடமையுள்ள பெண்களா! கற்பில் சிறந்தவர்கள், திராவிடப் பெண்கள் தான் என்ற உண்மையை நிரூபித்த (இராவணப் பெரியாரின் வாழ்க்கைத் துணைவி) மண்டோதரி அம்மையாரின் வழிவந்த நாம், அய்ந்து பேர்வழிகளைக் கணவனாகப் பெற்று ஆறாவது பேர்வழி பேரிலும் ஆசைபோகுது என்ற பாஞ்சாலிப்பத்தினியை(?) வணங்குகிறீர்களே இது முறையா? என்று கேட்கமாட்டார்களா? இதுவரை கேட்காவிட்டாலும் இனியாவது கேட்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான், இதைச் சுமந்து கொண்டு உங்கள்கையில் தவழ்கிறது நமது குடிஅரசு.

மற்றும் அமெரிக்காவிலே கண் கெட்டவர்களுக்கு, நல்ல கண்களைப் பொருத்தும் ஆராய்ச்சியில் மும்முரமாக ஈடுபட்டு அந்த முயற்சியில், வெற்றிகரமாக முன்னேறியது ஒரு பெண்தான்! ஆனால் நம் திராவிடப் பெண்களோ யாருக்கேனும் கண் கொஞ்சம் மங்கலாகத் தெரிந்தாலும், மாரிஅம்மனுக்குக்கண்ணடக்கம்செய்து வைத்து அறியாமையின் உச்ச நிலையை அடையத் தவறமாட்டார்கள்.

இந்தமாதிரி மூடக் கொள்கைகளுக்கெல்லாம் தலை வணங்குவது பெரும்பாலும் திராவிடப் பெண்கள்தான்! இப்படிமூடத்தனத்திற்குஅடிபணிந்து கொண்டிருப்பதால் தான், எந்த உதவாக்கரைக்காரியத்திற்கும் பெண்ணையே உதாரணமாக எடுத்துக் கொள்கிறார்கள் சில ஆடவர்கள்! குறிப்பாக நிதிமந்திரி அவர்கள் பார்லிமெண்டில் பேசும்போது, புதுப்புடவை கட்டிய பழயமனைவியே என்றும், அரசமரத்தை சுற்றிய உடனே அடிவயிற்றைத் தடவிப்பார்க்கும் பேதைப் பெண் போல என்றும், பெண்களைக் கேவலமாக நினைத்துப் பேசும் அளவிற்கு நமது நிலை கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. பெண் என்றால் மிகக் கேவலமாக மதிக்கப்படுகிறார்கள் என்பதற்கு நாம் ஆதாரம்தேடி, எந்தப்பழம்பெரும் காப்பியங்களுக்கும் செல்லவேண்டியதில்லை. இன்றைய நடைமுறையிலும் சரி, உதாரணப் பழமொழிகளிலும் சரி பெண்கள் இகழப்படுகிறார்கள். இதையெல்லாம் நமது தோழியர்கள் சிந்திக்கவேண்டும். எங்காவது உற்சவம் என்றால், மூட்டை கட்டிக்கொண்டு கிளம்பும் நமது பாமரத் தோழியர்களுக்கு, அறிவுரை வழங்கி உற்சவக் கூட்டத்திற்குச் செல்வதைத் தடுத்து, பெரியார் கூட்டத்திற்குச் செல்ல ஊக்குவிக்கவேண்டும். பெண்களைப்பற்றிய அக்கரை பெண்களுக்குத் தான் உண்டு. யாராவது சுதந்தரம் வாங்கித் தருவார்கள் என்று நினைப்பது ஏமாளித்தனந்தான்!

எல்லாப் பெண்களும் முன்னேறி வரும். இந்தச் சமயத்திலே, திராவிடப் பெண்கள் தான் பின்னேறி வருகிறோம். தன் இனத்துக்காகப் பரிந்து பேச, இந்தியப்பார்லிமெண்டில், பார்ப்பன துர்க்காபாய் அம்மையார் இருக்கிறார். முஸ்லீம் இனத்துக்குச் சட்ட

[தொடர்ச்சி 8ம் பக்கம்]

ரோஜா முத்தையா

★ அவியல். ★

"கைவல்யம்"

★

"கிழங்கு வகை, காய் வகை ஆகியவைகளை ஒன்றாய்ப் போட்டுச் சமைத்துக் கொள்ளும் பதார்த்தத்திற்கு அவியல் என்று பெயர். இப்பொழுது இங்கிலீஸ் காய்களும் சேர்ந்து கொண்டதால், ருசியும் புஷ்டியும் அதிகம். ஒரு விஷயத்தை எழுதுகையில் நீட்டி எழுதவேண்டியிருக்கிறது. சொன்னதைச் சொல்லவேண்டி வருகிறது. பத்திரிகைக்கு இட நஷ்டமும், படிப்பவர்களுக்குச் சலிப்புமுண்டாகிறது என்று நான் நினைத்துப் பழைய குடி அரசில் அவியல் என்கிற பெயருடன் இருந்து வியாசமெழுதினேன். அதைப் போலவே பல சங்கதியின் குறிப்பை எழுதுவதற்கு இந்த வியாசத்திற்கு அவியல் என்கிற பெயர் கொடுத்தேன்.

மகாத்மா காந்தியைப் பின்பற்ற வேண்டும்; அவர் சொன்ன வழிநடக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். எழுதுவதிலும், பிரசங்கம் செய்வதிலும், அது ஒரு பாடமாகி விட்டது. வகுப்புத் துவேஷத்தை விட்டுவிட வேண்டுமென்று சொன்னது, அவர் சொன்னதில் முதன்மையானது. அவர் சொன்ன வகுப்புத் துவேஷம் இந்து முகமதியரைப் பொறுத்தது. இரண்டு சமூகங்களும் வகுப்புத்துவேஷத்தை விடாமற் போனால், இரண்டுக்கும் அழிவும், துன்பமும் தான். இப்பொழுது சச்சரவுகள் சில காணப்பட்டாலும் இரண்டு சமூகங்களும் அதைத் தெரிந்து வருகிறது. இரண்டு சமூகங்களும் நெருங்கிப்பழகாமல், வழக்க பழக்கங்கள் வித்தியாசப் படுத்துகிறதேயல்லாமல், இரு சமூகங்களும் ஒன்றின்மீதொன்று ஆபாசங்களை ஏற்றிக்கொண்டிருக்கவுமில்லை. இந்து முகமதியர்களை மிலேச்சரென்றும், முகமதியர்கள் இந்துவை காபர் என்றும் சொல்லும் வார்த்தை எங்கேயோ, எப்பொழுதோ, யாராலோ, சொல்லப்பட்டு மறைந்தும் போயிற்று. கொரானிலிருக்கும் ஆண்டவனும், இந்து வேதத்திலிருக்கும் தெய்வமும் ஒன்றுதான் என்று மகாத்மா சொன்னதை இரண்டு பேர்களும் கேட்டு ஒன்றாகப் பிரார்த்தனை செய்தார்கள். எப்படியும் ஒற்றுமை ஒப்பந்தம் உண்டாகிவிடும்.

இந்து முகமதியர்கள் ஒற்றுமை என்று இங்கே பேசுகிறவர்கள், இங்குள்ள பார்ப்பார் தமிழர் ஒற்றுமைகளையும்உள்ளடக்கிப் பேசுகிறார்கள். வகுப்புத்துவேஷம் கூடாதென்று பேசுகிறவர்கள் சேர்த்துப் பேசக்கூடாது. பிரித்துத் தனியாகப் பேசவேண்டும். அதுவும் வியக்தமாகப் பேசவேண்டும், இங்குள்ள பார்ப்பார்களுக்கும் திராவிடர்களுக்குமுள்ள துவேஷம் எந்த நாட்டிலும், ஏட்டிலும், கூட்டத்திலும் இல்லாதது. இந்தச் சண்டைக்குக் காரணம் கடவுள் என்கிறார்கள். சண்டைக்குக் காரணமாயிருக்கும் அந்தக் கடவுள் போய் விட்டால் சண்டை தீர்ந்து விடும். அந்த வஞ்சகக் கடவுள் போய் விட்டால், அநேகரின் வயிற்றுப்பிழைப்புப் போய் விடும். அதனால்அந்தக்கடவுளை அழைத்துக் குடி வைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். எல்லாத் தேசத்துக் கடவுளும் அந்தத்தேசத்துச்சனங்களைப் படைத்தார் என்றே சொல்லுகிறார்கள். இந்தத் தேசத்துக் கடவுள் மட்டும் தன் தலையிலிருந்து ஒரு கூட்டத்தையும், காலிலிருந்து ஒரு கூட்டத்தையும் உண்டாக்கினார் என்கிறார்கள். எல்லாத் தேசத்திற்கும் அந்தத் தேசத்துக் கடவுள் எல்லோருக்கும் பொது. இந்தத் தேசத்துக் கடவுள் மட்டும் பார்ப்பனருக்குச் சொந்த பந்து. ஒன்று இந்தக்கடவுள் எல்லோருக்கும் பொதுவாக வேண்டும், அல்லது இங்கே அந்தக் கடவுள் உதவாது. அப்படியில்லாவிட்டால் சண்டை எப்படி ஒழியும்? கடவுளால் வந்த சண்டை கடவுளால்தானே ஒழியவேண்டும். இரும்பை இரும்பால் திருத்த வேண்டும்; அழுக்கை அழுக்கால் போக்க வேண்டும்.

முகமதியர்களைத் தாழ்ந்த ஜாதி என்று இந்துவும், இந்துவைத் தாழ்ந்த ஜாதி யென்று முகமதியர்களும் சொல்வதில்லை. அப்படிச் சொன்னால் பெரிய குற்றம். இரண்டு ஜாதிக்குள்ளும் தீண்டாமையுமில்லை. இவர்கள் ஒற்றுமைக்குப் பலவழிகள்சுத்தமாகவேயிருக்கின்றன. பார்ப்பார்கள் திராவிடர்கள் சண்டை அப்படியல்ல. இந்த இரண்டு சாதிக்கும் உலகப் பொதுத் தெய்வம் இல்லை. இருப்பதாகச் சொல்லுவார்கள், அங்கீகரிக்க மாட்டார்கள். பொதுவுலக நீதியுமில்லை. நிஜமான உலகத்தில் சஞ்சரிக்க மாட்டார்கள். கற்பனா உலக சஞ்சாரம். அதைத்தான் பேசுவார்கள். கற்பனா உலகக் கடவுளும், அந்தக் கடவுளின் வாய்மொழியுமே பிரமாணம். அந்தப் பிரமாணந்தான் இவர்கள் வாழ்க்கைக்கு ஆஸ்பதம். அதுவும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு மாதிரி தெய்வங்களும், வெவ்வேறு மாதிரி தெய்வத்தால், சமயத்தால், சாஸ்திரத்தால்,சாதியால்உயர்ந்த சாதி என்பதைப் பார்ப்பார்கள் நிலை நிறுத்தி இருக்கிறார்கள். அதைக் குற்றம் சொன்ன ஒருசிலர் தவிர மற்ற ஜாதிகளெல்லாம் ஒத்து நடந்து வந்தன. இனியும் நடக்கின்றன. அறிவும், அபிமானமும், தேவையும், விர்த்தியாகியிருக்கும் இந்தக் காலத்தில், அவைகள் மறுக்கப்படுகின்றன. இசைதவறாகிறது, சண்டை வருகிறது. இயற்கையற்றதைச் சமநிலையில் நிறுத்திவைக்கும் சக்தி எதற்குமில்லை என்பதை, இந்துக்கள் இனியும் தெரியவில்லை. பார்ப்பார்களால் தூக்கிநிறுத்தப்பட்ட அசம்பாவிதங்களை யெல்லாம், பெரிய பூமியின் ஆகர்ஷணசக்தி தரைக்குக் கொண்டு வருகிறதென்பதைப் பார்ப்பார்கள் உணரவேண்டும். எப்படியானாலும் இந்தச் சண்டை தீரவேண்டும்; வகுப்புத் துவேஷம் கூடாது! என்று பிரசங்கம் செய்து விட்டால் தீர்ந்து விடுமா? அதிலும் கொள்ளையும் கொடுமையும் செய்கிறவர்களின் பிரதிநிதிகளே, வகுப்புத் துவேஷம் கூடாது! அதை எப்படியும் ஒழித்துக் கட்ட வேண்டும்! என்று பேசி பயப்படுத்தி விட்டால் அந்தப் பயம் எத்தனை நாளைக்கு நிற்கும்? மனுஷிய சாதியை அவயானப்படுத்தி, அதற்கெதிரே பொய்த் தேசாபிமானக்கர்வத்தை ஓயாமல் நிறுத்துவதினால், பேராபத்து வருமென்பதை ஆங்கிலேயர்கள் கண்டறிந்தார்கள். சுயராஜ்ஜியம் கொடுத்தார்கள். தங்கள்தேசத்துக் கடவுளே, எல்லாத் தேசத்திற்கும் கடவுள். அந்தக் கடவுளுக்கு மனுஷியர்களைப் பலிபோட்டால் கோபமுண்டாகு மென்பதைத் தெரிந்தார்கள். அவர்கள் அதிகாரங்களை நமக்குக் கொடுத்தார்கள். இதை நாம் தெரிய வேண்டும்! அதிலும் முக்கியமாகப் பார்ப்பார்கள் தெரியவேண்டும்! மான உணர்ச்சியும் மதியுமற்ற நமது நாட்டில், இந்தச் சண்டை தீரவேண்டுமானால் பார்ப்பார்கள் எப்படியிருந்தாலும் பூசுரர்களாகவே பூஜிக்கப்பட்டும், சூத்திரத்தாசிமக்கள் சூத்திரர்களாகவேயிருந்து, பார்ப்பார்கள் சொல் கேட்டு நடக்கவும், நிச்சயம் செய்து விட்டால் சண்டையில்லை. பெரியார் சொல்லுவது போலக் கருஞ்சட்டையை எல்லோரும் போட்டுக் கொண்டாலும், சண்டையும் நின்று விடும். அனுமார்கடல் தாண்டினதையும், இராமர் காட்டுக்குப் போனதையும், நமக்குக் காட்டிக் கொண்டிருப்பதும் தேவையில்லை. எல்லோருக்கும் பொதுவில் நடனமிடும் சிவத்திற்கும், எங்கும் நிறைந்து இங்குமட்டும் வந்து அவதாரம் செய்யும் விஷ்ணுவுக்கும், பார்ப்பார்களைக் காப்பாற்றும் வேலையுமில்லை.

மதுரையில் நடந்த தமிழ்நாடு சோஷலிஸ்டுகள் மகாநாட்டில் கே. பி. மேனன் செய்த பிரசங்கத்தில் வகுப்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

அச்சு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறால், இவ்வாரம் 8 பக்கங்களுடன் வெளிவருகிறது. மன்னித்திடுக! தூத்துக்குடி மாநாடன்று 24 பக்கங்களுடன் வெளிவர ஏற்பாடு செய்கிறோம். [மானேஜர்]

குடி அரசு

24—4—48 சனிக்கிழமை.

எச்சரிக்கை நினைவிருக்க வேண்டும்.

★

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு! எல்லோரும் சொல்லி விட்டனர். வக்கிர ரூபம் வயித்திநாதனிலிருந்து சாந்தமூர்த்தியான காந்தியார் வரை எல்லோரும் சொல்லி விட்டார்கள். ஆனால் மக்கள் ஒன்றுபட்டார்களா?

மக்களை ஒரு சமுதாயமாக ஒன்றுபட விடாமல் வெவ்வேறாகப்பிரித்து வைத்திருப்பது எது? அல்லது பிரித்து வைத்திருப்பன எவை?

படிப்பு, அதன் காரியமாகிய உத்தியோகம், பணம், அதன் காரியமாகியஸ்டேடஸ்அதாவதுதகுதி, தொழில், அதன் காரியமாகிய பெருமை என்று பலரும் பலவாறு கூறினாலும் நம் நாட்டைப் பொறுத்தவரையில் அதுவும்இந்து மதத்தைப் பொறுத்தவரையில் இவைகள் எல்லாம் பிரிவுக்கு, வேற்றுமைக்கு அடிப்படையான முக்கிய காரணங்கள் என்றுசொல்லிவிட முடியாது. இவைகளையெல்லாம் தன்னுள் அடக்கிய ஒரு மாபெரும் காரணமுண்டு. அது தான் இந்து மதத்திற்கே "தனிச்சிறப்புடைய" அதன் வருணாச்சிரமம். அதாவது ஜாதி பேத முறை.

மகாவிஷ்ணுவின் அவதாரங்களானமன்னர்கள், சூரியகுல, சந்திரகுல, அக்கினிகுல அரசர்கள் அதாவது சோழ பாண்டிய சேர ராஜாக்கள், மனுநீதி தவறாமல் மன்னுயிர் காத்து, மாதமும்மாரி மழை பெய்கிறதா? என்று மந்திரிகளைக் கேட்டறிந்து, தங்களுடைய அவதாரப் பெருமை கெடாமல் அதைக் காப்பாற்றிக்கொண்டு வரமுடிந்த அந்தக்காலத்தில், பிராமணர் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்கிற அய்ந்து பெரும் பிரிவுகளில் வைத்து சாஸ்திரத்திலும், சட்டத்திலும், நடைமுறையிலும் பார்ப்பனர்கள் கையாண்டு வந்தார்கள் என்றாலும், அந்த அரசர்கள் செல்லாக்காசுகளானபிறகு, இந்தநாட்டிற்கு வந்த மற்ற நாட்டவர்கள் வியாபாரத் துறையையும் கைக்கொண்டு இந்த நாட்டு வியாபாரிகளையும் நாணயமில்லாத தரகர்களாக்கிய பிறகு, பார்ப்பனன், சூத்திரன், பஞ்சமன் என்று மூன்று பிரிவுகள் தான் இப்பூலோகத்தில் (அவர்களை உயிரோடு வைத்திருக்கிற இந்தியா தானே அவர்கள்பூலோகம்) உண்டு என்று சாஸ்திரிகள் முடிவு கட்டி அதைச் சட்டத்திலும் நிலை நாட்டி நடைமுறையிலும் கையாண்டு வருகிறார்கள். இந்தப் பிரிவு அதாவது மனிதன் பிறந்த பிறப்பினாலேயே உண்டாக்கப்பட்டிருக்கும் பிரிவு, இந்த இந்துமதம் ஒன்றைத் தவிர உலகத்தில் வேறு எந்த மதத்திலும் இல்லாத இந்த அக்கிரம அநியாயம் ஒழிக்கப்படாத வரையில், உலகத்தோடு நம்மைச் சேர்த்து எண்ணுவதற்கே நமக்குத் தகுதியில்லை என்பது தான் நாம் நெடுநாளாக வற்புறுத்திச் சொல்லி வருவதாகும்.

இதை நாம் சொல்லும் போதெல்லாம் இதென்ன சுண்டைக்காய் விஷயம்! என்றார்கள் நம் நாட்டுத் தேசபக்த சிரோன் மணிகள். கட்டுப்பாட்டுக்குப் பயந்து,கட்டியிருக்கும் கதர் வேஷத்தை மறைக்க, சுண்டைக்காய் விஷயமென்று வாயால்சொல்லிவந்தார்களே தவிர, கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தங்கள் தங்களுடைய ஜாதியை, ஜாதியின் பெருமையை, ஜாதியினால் காரியத்தை முடித்துக் கொள்ளுகிற போக்கை மறந்து விடவில்லை. இருந்தாலும் சொல்லி வந்தார்கள் இதைச் சுண்டைக்காய் விஷயமென்று,

"இது சுண்டைக்காய் விஷயமல்ல! 25 வருடங்களுக்கு முன்னாலேயே சொன்னேன். அப்பொழுது இதை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இன்று இது பிரம்மாண்டமாக வளர்ந்து விட்டது. இதைத் தீர்க்க ஒரு வழி காணாவிட்டால் வகுப்புத் துவேஷத்தால் வந்த அனர்த்தங்களைப்போல எத்தனையோ பங்கு அனர்த்தம் இதனால் உண்டாகும். காங்கரஸ் நண்பர்களே! மறவாதீர்."

இதை நாம் கூறவில்லை. பெரியார் இராமசாமி அவர்களும் சொல்லவில்லை. சொல்லுபவர் காங்கரஸ் தலைவர். பெரிய தலைவர் தோழர் ராஜன் பாபுதான் இப்படிச் சொல்லுகிறார். சென்னை மாகாணத்தை மனதில் எண்ணிச் சொல்லவில்லை. பீகாரிலே இந்த நிலைமை என்கிறார் பாட்னா பொதுக் கூட்டத்திலே.

இந்து—முஸ்லிம் வகுப்புத் துவேஷம். அதன் விளைவு எண்ணற்ற மக்கள் அனாதைகள் ஆனார்கள். கணக்கில்லாத கன்னியர் சோரஞ் செய்யப்பட்டனர். அளவற்ற வாலிபர்கள் அடித்து, குத்தி, சுட்டுக்கொலைசெய்யப்பட்டனர். கொள்ளை, கொலை, தீவைத்தல் நித்திய சாதாரண நிகழ்ச்சிகள். மதிப்பிட முடியாத பொருள்கள் சேதம். இவைகள் தான் வகுப்புத் துவேஷத்தால் வந்த அனர்த்தங்கள்.

இந்த அனர்த்தங்களைப்போல எத்தனையோ பங்கு அதிகமான அனர்த்தம், சுண்டைக்காய் விஷயம் என்று தேசியவாதிகளால் சொல்லப்பட்ட ஜாதித்துவேஷத்தால் உண்டாகும் —என்கிறார் ராஜன்பாபு.

காங்கரஸ் கட்சி பதவிக்குவந்த பிறகு, பூரணசுதந்தரம் என்று சுயராஜ்யப் பள்ளுப்பாடிய பிறகு, இந்த நாட்டில் நடந்த முனிசிபாலிட்டி தேர்தலை எடுத்துக் கொண்டாலும், ஒவ்வொருஊரிலும் ஜாதி அடிப்படையில் தான் எலக்ஷன் நடந்தது என்பதையும் நம்தேசியத் தோழர்கள் வஞ்சித்துக் கொள்ளாமல் எண்ணிப் பார்க்கவேண்டும்.

சமீபத்தில் நடந்த காங்கரஸ் கட்சித்தலைவர்தேர்தலிலும், ஜாதி அடிப்படையிலேயே நடவடிக்கைகள் நடந்தன என்பதையும் அதுவும் வரதாச்சாரி போன்றவர்கள் கீழ்வெட்டான முறையில் ஜாதித் துவேஷத்தை வளர்த்தனர் என்ப

ரோஜா முத்தையா

தையும் எந்தத் தேசியவாதியும் மறந்துவிட முடியாததாகும்.

ஒரேநாட்டில் வெவ்வேறு வகையான ஜாதி உலகங்கள் இருந்து கொண்டிருக்கிறவரையில், அதுவும் அந்த உலகங்கள் ஒன்றையொன்று தாழ்த்திப்பேசி, காரியத்தில் நடத்திக் கொண்டிருக்கும்போது எவ்வளவோ பெரிய அனர்த்தங்கள் உண்டாயிருந்தால் அது ஆச்சரியப் படுவதற்குரியதல்ல. அவ்வாறு நம் மாகாணத்தில் உண்டாகவில்லை என்றால் அதற்குக் காரணம் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட திராவிட கழகம்தான் என்பதை அறிவுடைய ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கவேண்டும்.

ஜாதித்துவேஷத்தின் பிரும்மாண்ட வளர்ச்சியைக் குறித்துப் பேசிய தோழர் ராஜன்பாபு அவர்கள் அதைத் தீர்ப்பதற்கானமுறை என்ன? என்பதை விளக்கவில்லை. ஆனால் திராவிடத்தந்தை பெரியாரவர்கள் இந்த ஜாதித்துவேஷத்தைத் தகர்த்தெறிய ஒரு ஆலோசனையைக் காங்கரசுக்கும் அ. நி. சபைக்கும் வெளியிட்டிருக்கிறார்கள். அதை மற்றொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

"இந்திய யூனியன் கான்ஸ்டிடியூஷனிலும் இந்திய தேசியக் காங்கரஸ் கான்ஸ்டிடியூஷனிலும் "இந்திய யூனியனில்" உள்ள மக்களில் அல்லது இந்துக்கள் என்கிற சமுதாயத்தில் அரசியலின் பேராலும், மத இயலின் பேராலும், சமுதாய இயலின் பேராலும் பிராமணர், சூத்திரர், ஹரிஜனர் என்கிற பிரிவு எந்த முறையிலும் அநுஷ்டிக்கப்பட மாட்டாது"

"இந்த வார்த்தைகள் அரசியல் மத இயல் சமுதாய இயல் கொண்ட எந்த ஆதாரங்களிலும் உபயோகிக்கப்பட மாட்டாது. அதற்கு இடமும் கொடுக்கப்பட மாட்டாது. இவ்வார்த்தைகள் இருக்கும் ஆதாரங்களைச் சர்க்காரோ, காங்கரசோ மரியாதை செய்ய மாட்டாது. கல்வித் துறையிலும் இவ்வார்த்தைகளுக்கு, பிரிவுகளுக்கு இடம் இருக்க அநுமதிக்கப் படமாட்டாது"

இதைத் தெளிவாகக் காங்கரசும் காங்கரஸ் சர்க்காரும் மக்களுக்குச் சொல்லிவிடவேண்டும். பிறகு வகுப்புத் துவேஷம் இருக்குமா? வகுப்பு ஸ்தாபனங்களுக்குத் தான் என்ன வேலை என்று கேட்கிறார் பெரியார் அவர்கள்.

மக்கள் மக்களாகவாழவேண்டும் அதற்கு வழி என்ன? என்கிற சிந்தனையே உருவான பெரியாரவர்கள் தந்திருக்கும் இந்த ஆலோசனையைத் தேசியத் தோழர்கள் சிந்திக்கவேண்டும்.

யார் எத்தனை தடை உத்தரவைப் போட்டாலும் இனிப் பார்ப்பாரத் தன்மையைக் காப்பாற்றிவிட முடியாது. அல்லது சூத்திரத் தன்மையை நிலை நிறுத்திவிடவும் முடியாது. பஞ்சமத் தன்மையையும் பராமரித்துவிட முடியாது என்கிற உண்மைகளை உணர்ந்து இருக்கவேண்டும்.

மற்றவர்கள் எப்படிப் போனாலும், இந்த நாட்டுப் பத்திரிகைகள் இவ்வுண்மையை உணர்ந்து, இந்தத் துவேஷ மனப்பான்மை வளராமலிருக்க, துவேஷத்திற்கு அடிப்படையான ஜாதிகள், வகுப்புகள் அழிந்தொழிய, சமத்துவச் சமுதாயம் உருவாகப் பாடுபடவேண்டும்.

இருப்பதை மறைத்தோ, குறைத்தோ தினமணியைப்போல இனிமேலும் மதிப்பிடப்படுமானால், அப்போக்கிலேயே தேசீயத் தலைவர்கள் என்பவர்களும் நடந்து கொள்வார்களானால், அவர்களுக்குத் தோழர் ராஜன் பாபுவின் எச்சரிக்கை நினைவிருக்க வேண்டும் என்பதை மட்டும் நாம் எடுத்துக் கூறுகிறோம்.

தூத்துக்குடியில்

18-வது திராவிடர் கழக மாகாண மாநாடு V. O. C. மைதானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் "அர்ச்சுனன்" பந்தலில் மே மாதம் 8, 9-தேதி சனி, ஞாயிறுகளில் நடைபெறும்.

தலைவர்

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள்

திறப்பாளர்

T. P வேதாசலம் B. A. „

கொடி உயர்த்துபவர்

K. K. நீலமேகம் „

படத்திறப்பாளர்கள்

திராவிடநாடு

C. N. அண்ணாதுரை M. A. „

அன்னை நாகம்மையார்

இந்திராணி பாலசுப்பிரமணியம் „

A. T. P. செல்வம்

K. V. அழகிரிசாமி „

தாளமுத்து-நடராஜன்

A. P. ஜனார்த்தனம் M. A. „

V. O. சிதம்பரனார்

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. „

சீர்திருத்த நாடகம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் சொற்பொழிவாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் அனைவரும் வருகிறார்கள். திரண்டு வருக!

கே. வி. கே. சாமி,
செயலாளன்.

ரோஜா முத்தையா

[3ம் பக்கத் தொடர்ச்சி]

புவாத உற்பத்தியிடத்தைச் சரியாகச் சொன்னார். அதைநாம் தெரிவதைவிட, டாக்டர் சுப்பராயன் போன்றவர்கள் தெரிந்தால் நன்மையுண்டு. "கடந்த காலப்பிரபுத்துவ முறையில், எஞ்சியுள்ள மீதிதான் வகுப்புவாதம். பழைய பிரபுக்களுடைய அதிகாரமும், தன்னிச்சையும் போகவில்லையென்பதாம். சமூகப் புரட்சிகளைப் பிற்போக்கான வழிகளில் திருப்புவதற்குச் சலுகை பெற்ற வர்க்கத்தார்களின் சூழ்ச்சி வகுப்புவாதம். சமூகச் சீர்திருத்தங்களைப் பிற்போக்கில் தள்ளச் சலுகை பெற்றவர்கள் பார்ப்பார்கள்." வகுப்பு வாதங்களின் காரணங்களைச் சரியாகச் சொன்னார்.

சோஷலிஸ்டுத் தலைவர் ஜெயப்பிரகாஷ், மகாத்மா காந்தி இறந்தவுடன் அவருக்குப் பர்த்தியாக அவரிடத்தில் திருவண்ணாமலை ரமண ரிஷியைவைத்து நடத்தலாம்! ரிஷியும் நாம் நடக்கவேண்டிய வழி எல்லாம் சொல்லுவார்! என்றார். ஒரு தெய்வத்தையோ, ரிஷியையோ உண்டு பண்ணிப் பிரபலப்படுத்தி அதைக் காட்டித் தங்கள் காரியங்களை நடத்திக்கொண்டுபோவது பார்ப்பார்களின் பரம்பரை வழக்கம். அதை அனுசரித்து ஜெயப்பிரகாஷ், மகாத்மா இடத்தில் ரமண ரிஷியை வைத்துவிடலாமென்று சொல்லியிருக்கலாம். இதில் பெரும் நன்மையிருக்கிறது என்று பார்ப்பார்கள் நினைத்தால், அதை நடத்தி வைப்பதில் பார்ப்பார்களுக்குப் பெரிய கஷ்டமுமில்லை. ஜவஹர்லால் நேரு தென்னாடு வருவதாகச் சொல்லுகிறார்கள். அப்பொழுது நேருவை திருவண்ணாமலைக்கு அழைத்து, மூத்த மந்திரி முதல் சிஷ்யராக இருப்பதைக் காட்டி, மற்றவர்களை வரிசை தவறாமல் அமைத்து, நேருவுக்கு, ரிஷி இப்பொழுது பகவானாக்கப் பட்டதையும் சொல்லி, ரிஷி தரிசனமும் செய்து வைத்துத் தேசியப் பத்திரிகைகளைக் கொண்டுபிரசுரமும் செய்து, அதில் நேரு ரிஷியைப் பார்த்தது, இராமரை அனுமார் பார்த்ததுபோலவிருந்தது; அனுமாருக்கு உள்ளமும் அன்பும் உருகினதுபோல, ரிஷியைக் கண்ட உடன் நேருவின் உள்ளம் உருகிவிட்டது; சுக்ரீவனைக் காப்பாற்ற இராமர் அனுமாரிடம் வாக்குக்கொடுத்ததுபோல, இந்தியாவைக் காப்பாற்ற ரிஷி நேருவிடம் வாக்குக் கொடுத்து ஆசீர்வாதம் பண்ணினார் என்று தேசியப் பத்திரிகை எழுதுவதும், எழுத வைப்பதும் அவர்களுக்குக் கஷ்டமில்லை. அந்தக் கூட்டத்தில் ஒரு அமெரிக்கக்காரனிருந்தான். அவன் ரிஷியைக்கண்டும், அங்கிருந்த பக்தி சிரத்தையைக் கண்டும் ஆச்சரியப்பட்டு, இந்துக் கலாச்சாரத்தைப் புகழ்ந்தான் என்று எழுதிக்கொள்ளப் பத்திரிகை எழுத்தாளர்களுக்குத் தெரியும். பின் நேருவிடமிருந்து அழைப்பு வந்ததாகவும், வரவழைக்கச் செய்வதும் அவர்கள் பழகின வழிகள். பின் மகாத்மா இடத்திலும், பிரார்த்தனை இடத்திலும் ரிஷியைச் சேர்க்க வேண்டியது தானே பாக்கி. விமானத்திற்குப் பஞ்சமா? இங்கே இருக்கும் பிரமுகர்கள் அழைத்துக் கொண்டு போவார்கள். அங்கிருக்கும் பிரமுகர்களும் வரவேற்பார்கள். இறந்துபோன மகாத்மாவைப் பிழைப்பிக்கச் சாதாரணச் சந்நியாசிக்கு அழைப்பும், வரவேற்பும் நடந்திருக்கையில், ரிஷிக்கு நடப்பதில் ஆட்சேபணையோ, ஆச்சரியமோ வென்னவிருக்கிறது? ஊராரிடம் ரிஷி வேஷத்தில் பொருள் சம்பாதித்து, கூட்டாளிகளை ஏமாற்றி, எல்லாவற்றையும் தம்பிக்குக் கொடுத்துப் பார்ப்பார மடமாக்கி, திருவண்ணாமலையில் ரிஷியாய் விளங்குவது வடதேசத்தாருக்குத் தெரியாதே. இங்கு வந்த ஜெயப்பிரகாசருக்கே தெரியவில்லையே. யாரும் சொல்லவுமில்லை. ரிஷிக்கு மகாத்மாவின் வேலையைப் பார்ப்பது கஷ்டமுமில்லை. பிரார்த்தனையில் சிறு நேரம் கண்ணை மூடி மௌவுனமாகவிருக்கவேண்டும். பக்தி, பஜனை, பிரார்த்தனை எல்லாம் அவரவர்களே செய்து கொள்ளுவார்கள். பேசவேண்டிவந்தால் வேதாந்தப் பேச்சில் எல்லாம் சரிப்பட்டுவிடும். பக்கத்துணைக்குப் பார்ப்பார்களிருக்கிறார்கள். அவர்கள் பத்திரிகைகளுமிருக்கின்றன. பத்தாததற்கு இராமாயணமிருக்கிறது. இரணியன் காலம், நரசிம்மஅவதாரம். அந்தக்காலத்திலிருந்த அகஸ்தியர் இராமரைக் காட்டில் பார்க்கிறார். அதே அகஸ்தியரைப் பொதிகையில் இப்பொழுது கண்ட நமது பண்டிதர்களுமிருக்கிறார்கள். இதில் எந்தப் பார்ப்பார்களுக்கும் ஆட்சேபணையிருக்காது. ஆட்சேபணை யாராவது செய்தால் பிராமண துவேஷி, வகுப்புவாதி, நாத்தீகன் என்று தூற்றுவார்கள்.

மகாத்மா சொன்னதில் தீண்டாமை முக்கியம். தீண்டாமை போகாவிட்டால் இந்துமதமும், ஜாதியும் அழிந்து போகுமென்றார். தீண்டாமை போக வேண்டுமென்பதில் காங்கரஸ்காரர்களுக்கு அக்கறைதான். அதற்கு வேண்டிய வழிகளைச் செய்வதில்லை. கிராமங்களில் நடக்கும் கொடுமைகளில் கவனம் செலுத்துவதில்லை. தங்கள் வெளி வேலைக்குக்கூடத் தீண்டாதார்களை வைத்துக்கொள்வதில்லை. பொட்ளர், குசினி, மேட்டி, லஸ்கர், பாய், ஆயா முதலிய வேலைக்காரர்களுடன் வெள்ளைக்காரன்வாழ்ந்தான். அவர்கள் இப்பொழுது என்ன அவதிப்படுகிறார்களோ? அந்த உத்தியோகத்தில் நாமிருக்கிறோம். ஆபீஸ் சேவகர்கள், ஆபீசர்கள் ஜாதியாகவிருந்தால் ஆடலியாகப் போட்டு, வீட்டு வேலையும் வாங்கிக்கொள்ளலாமென்று நினைக்கிறோம். எவ்வளவு சம்பளம் வந்தாலும், அந்தஸ்து வந்தாலும், கீழான குணம் போவதில்லை.

ஆதிசங்கராச்சாரியார் காசிக்குப் போயிருந்தார். காசி விஸ்வநாதர் ஒரு சண்டாளன் வேஷத்தில் சங்கராச்சாரி பக்கம் வந்தார். ஏ சண்டாளா! விலகிப்போ என்று சங்கரர் சொன்னார். நான் தேகத்தில் சண்டாளனா? ஆத்மாவில் சண்டாளனா? உன் தேகத்திற்கும், ஆத்மாவிற்கும் என் தேகத்திற்கும், ஆத்மாவிற்கும் வித்தியாசமில்லையே? பின் எதனால் விலகிப்போகச் சொல்லுகிறாய்? என்று சொல்லித் தீண்டாமை இல்லை! இனிமேல் அதை விட்டுவிடு! என்று சங்கராச்சாரிக்குக் காசி விஸ்வநாதர் உபதேசம் செய்தார். சங்கராச்சாரி ஒத்துக் கொண்டார், ஒத்துக் கொண்டபடி நடந்தாரா? இல்லை. அவர் சுயசாதியான நம்பூதிரிப் பார்ப்பார்களுக்கு உபதேசம் செய்தாரா? அவர்கள் நடந்தார்களா? இல்லை. மற்ற சிஷ்யகோடிகள் கேட்டார்களா? நடந்தார்களா? இல்லை. காசி விஸ்வநாதர் சங்கராச்சாரிக்குத் தீண்டாமை இல்லை என்று உபதேசித்தது, சங்கரர் சரித்திரத்திலிருக்கிறது.

இந்துக்களுக்குக் காசி விசேடமான இடம். காசி விஸ்வநாதர் எல்லாத் தெய்வங்களையும்விடப் பெரியது. பார்ப்பார்களுக்கு இருதயம். பாப்பார்களுடைய உருட்டும், புரட்டும் ஊரெல்லாம் உபயோகப் பட்டதற்கு, அவர்களுக்குக் காசியே கை கொடுத்து வந்தது. மோட்சத்திற்கும், புண்ணியத்திற்கும் போகும் யாத்திரை வாசிகளைப் பல தந்திரத்தால் கொன்ற இடம். 'ஒரு ஆளைக் கொலை செய்யப் புரோகிதனிடமிருக்கும் ஆளுக்குக் கூலி அய்ந்து ரூபாயாம். அதெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு இப்பொழுது நின்று விட்டது. காசியிலிருந்து பிதிர்லோகம் பக்கம். காசியிலிருந்து பிதிர்லோகத்திற்குப் போகும், குறுக்கு வழிகளெல்லாம் அங்குள்ள பண்டாக்களுக்குத் தெரியும். பண்டாக்களுக்கெல்லாம் பெரிய பண்டா இருக்கிறார். அவர் ஒருமுள அடுக்குப் பூரியும், ஒருதட்டு அல்வாவும், அய்ந்து சேர் பாலும் குடித்துவிட்டு மெத்தையிலிருந்து, திண்டில் சாய்ந்து, உக்கா குடித்துக் கொண்டு, தங்கள் பிதிர்க்களைச் சொர்க்கத்திற்கனுப்பக் கயா, காசிக்கு வந்திருக்கும் யாத்திரை வாசிகளின் பிதிர்க்களை, அந்தஸ்துப்பிரகாரம் கணக்கெடுத்து, பிதிர்லோகத்தில் சுகமாக வைக்க வரி விதிப்பார். அவருக்குத்தான் பிதிர்லோகத்திலுள்ள சர்வ அதிகாரமும். ஜெயிலிலிருப்பவர்களின் பந்துக்களைப் பயமுறுத்தி மிரட்டிப் பணம் பறிப்பது போலப், பணம் வாங்குவார். பணம் கொடுக்காவிட்டால் ஜெயிலிலிருப்பவர்களைத்

ரோஜா முத்தையா

கஷ்டப்படுத்திவிடுவார்கள். பணம் கொடுத்தால் சுகமாக வைத்திருப்பார்களென்று பண்டாக்கள் நினைப்பதுபோல, யாத்திரை வாசிகளும் நினைத்து தங்கள் பிதிர்க்கள் சௌக்கியமாக இருக்கப்பணம் கொடுப்பார்கள். பணம் பத்தாவிட்டால் பண்டாக்கள் கடன் கொடுப்பார்கள். பின் ஆறுமாதக் கடன்கார அரபிகளைப் போல, வசூல் செய்து விடுவார்கள்.

இந்துக்களுக்குத் தெய்வத்தில் பெரிய தெய்வமான காசிவிஸ்வநாதரே, குருவிற்குப் பெரியகுருவான சங்கராச்சாரிக்கு, தீண்டாமையில்லை! அந்த அறியாமையை விட்டு விடவேண்டும்! என்று நேரில் வந்து சொன்னதைக் கேட்டார்களா? விட்டார்களா? பின் எந்த மகாத்மா சொன்னால் கேட்பார்கள்? ஏமாற்றுக்கும், வரும்படிக்கும் எந்தச் சங்கமும் அவர்களுக்குச் சொந்தம். ஒரு இராஜசபையில் சங்கீதக் கச்சேரி நடந்தது. எல்லோரும் பேஷ் என்று சத்தம் போடுகிறார்கள், கை தட்டுகிறார்கள், தலைஆட்டுகிறார்கள். அந்தச் சத்தங்களினால் ராஜாவிற்குச் சங்கீதம் கேட்கவில்லை. ராஜா மந்திரியிடம், மந்திரி! இவ்வளவு பேரும் சங்கீதத்தைத் தெரிந்து ரசிக்கிறவர்கள்தானா? என்றார். சங்கீத ரசிகர்களை நான் தெரியப்படுத்துகிறேன் என்று மந்திரி சொல்லிவிட்டு, சிப்பாய்களைக் கூப்பிட்டு, "யார்பேஷ் என்று சொல்லுகிறார்களோ அவர்கள் தலையை வெட்டிவிடு" என்று உத்திரவு போட்டார். பேஷ் என்கிற சத்தமே நின்று விட்டது. கச்சேரி நடந்துவந்தது. ஒருபாட்டில் நல்ல அமைப்பும், சங்கீத ஒழுங்குமுறை தவறாமலும், இனிமையாகவும் வித்வான்பாடினான். அங்கிருந்த ஒரு ரசிகன் தலை போனாலும் போகட்டும்? இதற்கு ஒருபேஷ் என்றான். சிப்பாய் வெட்டப் போனான். அவனை வெட்டாதே என்று மந்திரி தடுத்து விட்டான்.

மகாத்மாவை எல்லோரும்பேஷ் என்றுதான் சொல்லுகிறார்கள். அந்தக் கதையைப்போலப் பரிசோதிக்க வழியில்லை. தீண்டாமையை யார் விடுகிறார்களோ, அவர்கள்தான் பேஷ் சொல்ல யோக்யதை புடையவர்கள். ரயிலிலும், 'கடைவீதியிலும், பென்சர் ஓட்டலிலும் இங்கிலாண்டிலும் தீண்டாமையை விட்டு விடுகிற மாதிரியல்ல. தங்கள் வீட்டுப் பழக்கத்தில் தீண்டாமையை விடவேண்டும்.

பிராமணன் என்றால், கர்மேந்திரிய ஞானேந்திரியத்தை வென்றவன். உலகப்பற்றை விட்டஞானி, என்பது பொருள். அப்படியில்லாத பார்ப்பார்களைப் பிராமணன் என்று சொல்லுவது சரியல்ல. எந்த ஞாயத்திற்கும் பொருந்தாது.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE

தூத்துக்குடி மாநாட்டில் பெண்களுக்கு தனி வசதி

தூத்துக்குடியில் மே. 8, 9ல் நடைபெறும் திராவிடர் கழக மாகாண மாநாட்டிற்கு வரும் பெண்களுக்குத் தனி வசதி செய்யப்பட்டிருக்கிறது. இருப்பதற்குத் தனி இடம், உணவு, தண்ணீர் மற்றும் பல சவுகரியங்களும் செய்யப்பட்டிருக்கிறது. வசதி எப்படியோ என்ற எக்கம் வேண்டவே வேண்டாம். எனவே பெண்கள் அனைவரும் தூத்துக்குடிக்குப் புறப்படுங்கள்.

உணவு.

மாநாட்டில் உணவு வசதி எப்படி என்று விபரம் கேட்டு கணக்கற்ற கடிதம் வந்து கொண்டிருக்கின்றன. மாநாட்டில் இரண்டு நாளைக்கும் உணவு வசதி உண்டு. இரண்டு நாளைக்கும் உணவுக்கு ரூ. 2—8—0 தான். வரவேற்பு குழு டிக்கட் எடுத்தவர்களுக்கு சாப்பாடு இலவசம்தான். வ. கு. டிக்கட்டைக் காட்டி மாநாட்டுப் பந்தலில் உணவு டிக்கட் பெற்றுக் கொள்ளலாம். பெண்களுக்கு மாநாட்டின் நுழைவுக்கு இலவசமே தவிர, உணவுக்கு இலவசமல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே. வி. கே. சாமி.

"கதிரவன்"

(விசேஷ வெளியீடாக 5—5—48 ல் வெளிவரும்) 15—4—48-ல் வரவேண்டிய "கதிரவன்" தூத்துக்குடி திராவிடர் மாகாண மாநாட்டைக் குறித்து நிறுத்தப்பட்டு 5—5—48-ல் அதிக பக்கங்களுடன் படங்களுடன் விசேஷ வெளியீடாக வெளிவரும்.

தோழர்கள்.

கரூர் பி. சோமசுந்தரம்-கும்பகோணம் மங்கையர்க்கரசி இவர்களின் திருமணம் 21—4—1948 தேதி கும்பகோணத்தில் ஜில்லா ரிஜிஸ்ட்ரார் அவர்களால் பதிவு செய்யப்பட்டது. திருமண விபரம் விரிவாக அடுத்தவாரம் வெளிவரும்.

அறிவிப்பு.

ஈரோடு டவுன் மருத்துவ வீதியிலிருக்கும் சின்னப்ப பண்டிதன் மனைவி பழனியம்மாள் தெரிவித்துக் கொள்ளுவதென்னவென்றால்:—

இப்பால் காலஞ்சென்ற எனது கணவரான சின்னப்ப பண்டிதர், தனக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை யாரும் எவ்வித பராதீனமும் செய்யக்கூடாது என்று கண்டு உயில்சாசனம் எழுதி வைத்திருப்பதால் அவருக்குப் பாத்தியப்பட்டிருந்த சொத்துக்களை வார்சுகள் யாராவது பராதீனம் செய்தால் அவை செல்லத்தக்கதல்ல என்பதைக் கண்டிப்பாய் அறியவும்.

பழனியம்மாள்.

ஈரோடு, 19—4—48.

நோட்டீஸ்.

தாராபுரம் தாலுக்கா கஸ்பா காங்கயத்தில் இருக்கும் ஜமாலுதீன் சாயபு பெண்சாதி காத்தூன்பீபி பொது ஜனங்களுக்குத் தெரிவிப்பது:—

இப்பவும் நான் என் புருஷன் ஜமாலுதீன் சாயபு என்பவர் பேரில் ஈரோடு அடிஷனல் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் Me 47/43ல் ஜீவனாம்சத்துக்கு மனுப் போட்டு ஷையார் எனக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 7ம் என் பெண் குழந்தைக்கு ரூ. 5ம் ஆக ரூ. 12 கொடுத்து வரும்படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி தொகையைச் சரிவரச் செலுத்தாமல் வாரண்டில் பிடித்து வசூலித்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே மேற்படியாருக்குப் பாத்தியப்பட்ட ஸ்தாவர சொத்துக்களின் பேரில் சார்ஜ் கிடைக்கத் தாவாபோடுவதாக நான் சொல்லிவந்ததின் காரணமாக, மேற்படி சொத்துக்களின் பேரில் தொடர்ந்தால் பிரயோஜனமில்லாமல் போக வேணுமென்ற கெட்ட எண்ணத்துடன், என் புருஷன் இதனடியில்கண்ட சொத்துக்களை மேல்கண்ட ஜீவனாம்சத் தீர்ப்பை மறைத்து மோசடியாக, கிரயம் வகையறா பத்திரங்கள் நிபமாத்திரமாக ஏற்படுத்து முகமையான பிரயத்தனங்கள் செய்து வருவதாகத் தெரியவருவதால், அடியிற்கண்ட சொத்துக்களை கிரயம் வகையறா செய்து கொள்ளக் கூடாதென்றும், இந்த நோட்டீசைமீறி ஏதாவது பராதீனங்கள் ஏற்பட்டால் மேற்படி பராதீனங்கள் மேல்கண்டஜீவனாம்சத் தீர்ப்பிற்கு முன் செல்லுபடியாகாதென்றும் இதனல் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

சொத்து விபரம்.

கோயமுத்தூர் ரி. டி. காங்கயம் சர். ரி. டி. தாராபுரம் தாலுக்கா காங்கயம் கிராமம் காங்கயம்ஊர்கட்டில், அருணசலம் செட்டியார் தார்சுகடை வீடு பிரவிடை வகையறாவுக்கு வடக்கு, மகமத் கவுஸ் சாயபு வகையறா வீட்டிற்கும் பிரவிடைக்கும் தெற்கு, குட்டிசெட்டியார், சேமலை நாவிதன் வகையறா வீடு பிரவிடைகளுக்கு மேற்கு, சென்னிமலை ரோட்டிற்கு கிழக்கு, இதன் சதுர மத்தியில் 3 அங்கணம் தார்சு கடையும், மேல் வீடும், இதற்குப் பின்னால் இருக்கும் சமையல் ரூம் தாழ்வாரம் பிரவிடையும், இதற்கு அடுத்த வடபுறம் உள்ள காலியிடமும், இந்தக் காலியிடத்தில் வடபுறம் இருக்கும் சேந்துகிணறு1ல் பாதியும் தார்சுகூடம் பிரவிடை வகையில் சாக்கடைத் தண்ணீரை மாமூல்படி அருணசலம் செட்டியாரிட ஜலதாரையில் வடித்துக் கொள்ளும் பாத்தியமும் சகிதம் கிழபுறம் கருங்கல் காம்பவுண்டு சுவரும் சகிதம். (ஒப்பம்)

காத்துன்பீபி.

காங்கயம், 19—4—48.

[2ம் பக்கத் தொடர்ச்சி]

சபையில் பேகம் அமிருதீன் அம்மையார் இருக்கிறார். ஆனால் நம் இனத்துக்குப் பரிந்துபேச உண்மையான ஒரு திராவிடப் பெண்ணும் சட்டசபையில் இல்லை. இந்தியப் பார்லிமெண்டிலுமில்லை.

இதற்குக் காரணம் நமது இயக்கத் தோழர்களின் அடக்குமுறை தர்பார்தான்! தோழர்களின் வீட்டிலே பெண்களே இல்லையா என்ற சந்தேகம்கூட உண்டாகிறது. விடுதலை ஆசிரியர் எழுதியதுபோல, இயக்கத் தோழர்களின் வீட்டுப்பெண்களைப் பெருங்காய டப்பிக்குள் தான் போட்டு மூடிவைத்திருக்கிறார்களோ! என்னவோ! இயக்கத் தோழர்கள் ஒவ்வொருவரும் அவரவர்கள்வீட்டுப்பெண் மணிகளைமுன்னேற்றத்துறையில்ஊக்குவிப்பது அவரவர் கடமை என்பதை உணராததால் தான் நம் இனப்பிரதிநிதி சட்டசபையில் இடம்பெற முடியவில்லை. இதைப்பற்றி, நமது தோழர் தோழியர்கள் கவலைப்பட்டதாகத்தெரியவில்லை.

பெண்களுக்குச் சுதந்தரம் கொடுக்கவேண்டும்! அவர்களைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும்! என்று மேடை ஏறி வீரத்தனமாகப் பேசும் நமது இயக்கத்தவர்களின் வீட்டுப் பெண்மணிகளின் நிலைமையே இவ்வளவு லெட்சணத்தில் இருக்கும்போது, ஒன்றிலும் சேராமல் பத்தாம் பசலியாக இருக்கும் சில தோழர்களின் வீட்டுப் பெண்களின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்த்தால் நெஞ்சு வேகவில்லையா? ஆண்களிடத்தில் பெண்கள் சிக்கித் தவிப்பதற்கும், அக்கினிப் பந்தலிலே வெண்ணைப் பதுமை கூத்தாடுவதற்கும் எந்தவித வித்தியாசமுமேஇல்லை என்பதே எனது கருத்து.

கொஞ்ச நாட்களுக்கு முன் ஏதோ ஒரு திருமணத்தில் (இடமும் தேதியும் ஞாபகம் இல்லை) திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் பேசும் போது, பெண்கள் புரட்சி செய்யும் காலம் வந்தாலும் வரலாம்! ஆகவே சீக்கிரத்தில் பெண்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்க வேண்டியது ஆண்களின் கடமை என்று சொன்னார்கள். அது எவ்வளவுக்கெவ்வளவு உண்மை என்பதை நமது தோழியர்கள் ஒவ்வொருவரும் நிரூபிக்கத்தயாராக வேண்டும். அதாவது பானை பிடிப்பதை விட்டு விட்டு, அந்தக் கையால் புரட்சிக்கொடியைப் பிடிக்க வேண்டும். அடுப்பங்கரையை விட்டு விட்டுப் புரட்சி பாசறைப் நோக்கிப் புறப்படவேண்டும். எனக்கு வைர நெக்லேஸ், இல்லையே! தங்க ஒட்டியாணம் இல்லையே! சுராச்சி சேலை இல்லையே! என்ற கவலையை விட்டு விட்டு, எனக்குச் சுதந்தரம் இல்லையே! சுதந்தரம் இல்லையே! என்று துடிதுடிக்க வேண்டும். ஊற்றிலேசீர் எடுக்க (கிராமமாதலால் குழாய் இல்லை) நான் முந்தி நீ முந்தி என்று நமக்குள்ளேயே சண்டை போடுவதை நிறுத்திவிட்டுப் பெண்ணுரிமைப்போர் தொடுக்க நான் முந்தி, நீமுந்தி என்று கிளம்ப வேண்டும். இந்தப்படி நாம் செய்ய ஆரம்பித்தால், ஆண்கள்,பெண்களுக்குச் சமஉரிமை கொடுப்பதுமன்னியில், அடிமையாகக்கூட இருக்கத் தயாராகி விடுவார்கள். ஆனால் நாம் அதை விரும்பமாட்டோம் என்பதை அப்பொழுது செயலில் காட்டவேண்டும்.

அன்னை நாகம்மையாரின் மரணத்திற்குப்பின், நமது நிலைமையை எந்தத் தலைவியர்களும் கவனிக்காததால்தான், இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட புரட்சி செய் என்று சொல்லும் நிலைமையிலே இருக்கவேண்டியிருக்கிறது. அன்னை நாகம்மையார் இருந்தால் என்றோ நமது இனத்தை முன்னேற்றி இருப்பார்களே! பட்டிதொட்டிகளிலும் (பெரியாரின் பேருழைப்பைப் போல) சென்று அறிவுரைகளை வழங்கிப் பெண்ணுலகத்தை எவ்வளவோ, மேம்பட வைத்திருப்பார்களே என்று நினைக்கும்போது தோழியர்கள், நமது துர்அதிஷ்டத்தை நினைத்துக் கண்ணீர் விடாமல் இருக்க முடியாது. என்ன செய்வது? நமது துக்கத்தை மறைத்துக்கொண்டு அன்னை நாகம்மையாரால் தொடரப்பட்ட, பெண்கள் சுதந்தரப்போராட்டத்தை நடத்தி வெற்றி காணுவது தான் நமது அன்னைக்கு நாம் செய்யும் மரியாதையாகும்.

மற்றும் எனது மதிப்பிற்குரிய தோழியர்களில் சிலர், கன்னிப்பருவமாக இருக்கும்வரை, பெண்களுக்குச் சுதந்தரம்! ஆண்களுக்கு அடங்கக்கூடாது! நாட்டுக்கு உழைக்க வேண்டும்! என்று சொல்லிக் கொண்டிருந்து விட்டு, தங்களது கன்னிப் பருவத்திற்கு (கல்யாணம் செய்தவுடன்) சீட்டுக் கொடுக்கும்போது, அவர்கள், வார்த்தைகளுக்கும் சேர்த்தே சீட்டுக் கொடுத்து விட்டு, கணவன்முன்னால், பெட்டிப்பாம்பு போல்அடங்கிவிடுகிறார்கள். நாட்டுக்கு எப்படி உழைப்பது என்ற ஆராய்ச்சியை விட்டுவிட்டு, நாம் எந்த நிறச் சேலை உடுத்திக் கொண்டால், கணவரைத் திருப்திப்படுத்தலாம் என்ற ஆராய்ச்சியில் இறங்கிவிடுகிறார்கள்! அதற்கேற்றாற்போல, அவர்கள் கணவன் மார்களும், நமது மனைவிக்குப் பிடித்தமான சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து போட்டு விட்டால், தலைக்கு மேலே பேசமாட்டாள், சுதந்தரத்தைப்பற்றிப் பேச்செடுக்க மாட்டாள், என்று நினைத்து, நாய்க்கு ரொட்டித்துண்டு போடுவதுபோல, ஏதாவது வாங்கிகொடுத்து அவர்களை மயக்கிவிடுகிறார்கள். இந்த மாதிரி, பெண்கள், தேனில் விழுந்த ஈயின் நிலைமையை அடைவதால்தான் பெருவாரியாகப்பெண்கள் இருந்தும், சுதந்தரப் போராட்டம் துவக்க முடியவில்லை.

இந்த நிலை ஒழிய ஒவ்வொரு பெண்ணும் தன்னைப் போராட்டத்திற்குத் தயார் செய்து கொள்வதற்கு முன் கீழ்க்கண்ட பிரதிக்ஞையை அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது:—

(1) என்னுடைய அடிமை ஒழியும்வரை நான் எந்த ஆபரணங்களையும் அணிவதில்லை.

(2) எனது அடிமை நிலையில் நான் துக்கம் கொள்வதற்கு அறிகுறியாகக் கருப்பு உடையேதான் அணிவேன். பகட்டான எந்த ஆடையும் நான் இனி அணிவதே இல்லை. இது உறுதி! உறுதி! என்று ஒவ்வொரு தோழியர்களும் தங்கள் நெஞ்சத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்தகைய மனவுறுதியோடு நமது வேலையைத் துவக்கினால், நிச்சயம் வெற்றி உண்டு. இராவணப் பெரியார், வாலி, இரணியன், இவர்களையெல்லாம் ஆரியனிடம் காட்டிக் கொடுத்த வெட்கம் கெட்ட ஆண்கள் கூட்டம் (தயவு செய்து ஆண்கள் மன்னிக்வேண்டும். எனக்குவந்த ஆத்திரத்தால் இப்படி எழுதுகிறேன்) நம்மிடம் நிபந்தனையற்ற சரணாகதி அடைவார்கள். கவலை வேண்டாம். பயத்தை விட்டு விட்டு நமது திராவிடப் பெண்கள் ஒன்றும் சளைத்தவர்களல்லர்; ஒரு சாக்ரடீசைப்போல, ஒரு ஆபிரஹாம் லிங்கனைப்போல, ஒரு லெனினைப்போல, ஒரு காரல் மார்க்சைப்போல, திராவிடத் தந்தை பெரியாரைப் போலவும் நாங்கள் ஆகமுடியும் என்பதைச்செயலளவில் நிரூபிக்க ஒவ்வொரு தோழியர்களும் கருப்பு உடை அணிந்து நமது சுதந்தர விரோதிகளிடம் போர் தொடுக்க வீரமுழக்கம் செய்து கொண்டு பவனி வரவேண்டும்.

தேதி மாற்றம்

தூத்துக்குடி மாநாடு.

மே 1, 2ல் நடைபெற விருந்த மாகாண மாநாடு பலரின் வேண்டுகோளுக்கிணங்கி 8, 9-தேதிகளில் நடத்துவதென மாற்றப்பட்டிருக்கிறது.

செயலாளர்.